# TEACHER'S CARE ACADEMY

## KANCHIPURAM

# தமிழ்

## (அலகு - I)




# COMPETITIVE EXAM

## FOR

# PG-TRB 2019 – 20

## அலகு – 1

## மொழியின் தோற்றம்

### பண்பட்ட நிலம்

D அறிஞர் வில்சன் என்பவர் மொழியின் பிறப்பு என்னும் தம் நூலின் முடிவில் கூறும் கருத்துக்கள் இங்குக் கருதத்தக்கன.

D மொழி என்பது மக்களின் மனத்தைக் காட்டும் கண்ணாடி என்பர்.

D வடமொழியைப் பாணினி ஆக்கி வளர்த்தார் என்றும், தென்மொழியாகிய தமிழை அகத்தியர் வளர்த்தார் என்றும் இந்நாட்டில் உள்ளது.

D இத்தாலி மொழி தாந்தே என்னும் கவிஞராலும், ஆங்கிலம் சாஸர் என்னும் புலவராலும், ஜெர்மன் மொழி லூதர் என்னும் அறிஞராலும், டச்சுமொழி கிறிஸ்தியேர்ன் பெடெர்ஸன் என்பவராலும் ஆக்கி வளர்க்கப்பட்டன என்று ஐரோப்பியர்கள் நம்பி வந்தனர்.

D மொழியின் தோற்றத்தை ஆராய்வதற்கு வேறுவகையான முயற்சிகள் பல செய்யப்பட்டன. ஆயினும் வெற்றி கிட்டவில்லை. எகிப்து மன்னர் ஒருவர் புதிதாகப் பிறந்த இரண்டு குழந்தைகளை ஆயன் ஒருவனிடம் ஒப்படைத்தது. அவற்றிற்கு ஆட்டுப்பால் தந்து வளர்க்குமாறும், அவற்றின் எதிரில் ஒரு சொல்லும் பேசுகின்றன என்று கவனிக்குமாறும் ஏற்பாடு செய்தார். இத்தகைய முயற்சியே மொகலாய் மன்னன் ஒருவனாலும் இரண்டாம் பிரடெரிக் மொகலாய் மன்னன் ஒருவனாலும் இரண்டாம் பிரடெரிக் என்னும் ஐரோப்பிய மன்னனாலும் செய்யப்பட்டதாகத் தெரிகிறது.

D மொழி தோன்றித் தொடக்கத்தில் அடிச்சொற்கள் (Roots) பல தோன்றித் தொடக்கத்தில் அடிச்சொற்கள் (Roots) பல இருந்தன என்றும், அவற்றை ஒன்றோடொன்று சேர்த்துச் சொற்களாகவும், சொற்றொடர்களாகவும் அமைத்து மனிதன் பேசக் கற்றுக்கொண்டான் என்றும் கருதும் கருத்துக்குக் காரணம் இதுவே.

D வட மொழி இலக்கணக்காரர் அம்மொழியில் 1706 அடிச்சொற்கள் உள்ளன என்று கணக்கிட்டுள்ளனர்.

D மாக்ஸ்முல்லர் என்னும் அறிஞர் அடிச்சொற்கள் எல்லாம் ஓரசைச் சொற்கள் என்றும் ஈரசையாக உள்ள அடிச்சொற்கள் ஓரசைச்சொற்களிலிருந்து வளர்ந்தவை என்று கொண்ட கருத்தினராய், வடமொழியில் அவ்வளவு அடிச்சொற்கள் இல்லை என்று மறுத்து, அதனிலும் குறைந்த எண்ணிக்கையைக் காட்டினர்.

D ஹீப்ரு மொழியில் 500 அடிச்சொற்கள் இருப்பதுபோல் வடமொழியிலும் அவ்வளவே இருத்தல் வேண்டும் என்றார்.

D எடுத்துக்காட்டாக நடு பிரசில் (Central Brazil) நாட்டுப் பகைரி (Bakairi) மொழியில் ஒவ்வொரு வகைக்கிளிக்கும் ஒவ்வொரு பெயர் உண்டு.

D லிதுவேனியர் (The Lithuanians) மொழியில் குதிரையின் வெண்ணிறத்திற்கு ஒரு பெயரும், கால்நடையின் வெண்ணிறத்திற்கு வேறொரு பெயரும் மற்ற விலங்குகளின் வெண்நிறத்திற்கு மற்றொரு பெயரும் வழங்க, பொதுவாக வெண்ணிறத்தை உணர்த்த ஒரு சொல் இல்லை.

D 'க்ளாமத்' இந்திய மொழியில் ஒவ்வொரு விலங்கின் ஓட்டமும் ஒவ்வொரு சொல்லால் குறிக்கப்படுகின்றது. ஆனால் ஓடுதல் என்ற பொதுவினை இல்லை (Pillsbury and Meaders, The Psychology of Language)

<u>போலிமொழி</u>

D பறவை விலங்கு முதலியவற்றின் ஒலியைக் கேட்டு அவற்றைப்போல் ஒலித்தலால் மொழி பிறந்தது என்பது ஒரு கொள்கை அவ்வாறு பிறந்த மொழியே இசை மொழி அல்லது போலி மொழி (The Onomatopoetic theory or the bow-wow theory) என்பது.

D இந்தக் கொள்கையைப் பல சான்றுகள் தந்து நிறுவியவர் ஹெர்டர் என்னும் அறிஞர் பெர்லின் கழகம் (Berlin Academy) மொழித் தோற்றத்தைப் பற்றிய சிறந்த ஆராய்ச்சிக் கட்டுரைக்குப் பரிசு வழங்க முன்வந்தது. அந்தப் பரிசை அறிஞர் ஹெர்டரே பெற்றார்.

D Max Muller, the Science of Language.

D எகிப்து நாட்டு மக்கள் பூனையை மியா என்பர். பாபுவன் மக்கள் கோடரியை டின்டின் என்பர் உணவை 'நம் நம்' என்பர் நாயை 'பவ்பவ்' என்பர்.

D மாக்ஸ்முல்லர் கூறுவது போல இத்தகைய ஒப்புமை ஒலிகள் ஒரு மொழிக்கு இன்றியமையாத கருவிகள் அல்ல. விளையாட்டுப் பொருள்கள் எனலாம்.

<u>உணர்ச்சி மொழி</u>

D வெறுப்பு, வெருளி, மகிழ்ச்சி, அழுகை முதலிய உணர்ச்சி வயலாக இருக்கும்போது பிறக்கும் ஒலிகள் மொழிக்கும் காரணம் என்பர் ஒருசாரார். இதனை உணர்ச்சி மொழி அல்லது குறிப்பு மொழி பற்றிய கொள்கை The interjectional theory orth pooh-pooh theory) என்பவர்.

<u>பண்புமொழி</u>

D மணியின் கண் கலி அமைந்திருத்தல் போல, ஒவ்வொரு பொருளுக்கும் இயல்பாகவே ஒவ்வொரு வகையாக ஒலிக்குந்தன்மை உள்ளது. மக்களுக்கும் அத்தன்மை உண்டு. அறிவால் உணரும்.

<u>சொற்றொகை நிலை</u>

எவ்வளவு பெரிய வாக்கியமும் இருக்கின்றது. இந்நிலை சொற்றொடர் (Polysynthetic) என்பது இதனை குறிக்கும்

<u>மொழி நிலையில் நாகரிகம்</u>

G உட்பிணைப்பு மொழிகள் கருத்துக்களை எளிதில் புலப்படுத்தாமையால் அவை தனிநிலை மொழிகளைவிடத் தாழ்ந்தவை என்பது யெஸ்பர்ஸன் கொள்கை. சாய்ஸ் என்னும் அறிஞரும் உட்பிணைப்புமொழிக்குச் சிறப்புத் தர மறுக்கின்றார்.

G மக்களின் நாகரிகத்திற்கும் மொழியின் வளர்ச்சிக்கும் முடிபோடும் முறை மிகத்தவறானது என்கிறார் யெஸ்பர்ஸன்.

G தென் ஆப்பிரிக்காவில் பண்டு (Bantu) முதலிய மொழிகளில் மிகச் செறிந்த உட்பிணைப்புநிலை காணப்படுகிறது. அவற்றை நோக்க சமஸ்கிருதம், கிரீக், லத்தீன் முதலிய மொழிகளில் உட்பிணைப்பு இல்லை என்றும் கூறத்தோன்றும்.

# TEACHER'S CARE ACADEMY

## KANCHIPURAM

# தமிழ்

## (அலகு - II)




# COMPETITIVE EXAM

FOR

# PG-TRB 2019 – 20

அலகு – 2

சொற்றொடர்

D மொழிக்கு காரணமான ஒலிகள் மட்டும் இருப்பின் பொருளை உணர்த்தல் இயலாது. சொற்கள் மட்டும் இருப்பினும் பொருளை உணர்த்தல் இயலாது.

D அவன் மரம் கருப்பு அந்த பார்த்தான் இல் மகன் பூனை என்று சொற்களை அமைப்பதால் பொருள் உணர்த்தப்படவில்லை.

D அவன் மகன் அந்த மரத்தில் கருப்பூனை பார்த்தான் என்று ஒரு முறைப்பட்ட அமைத்தால்தான் பொருள் உணர்த்தப்படுகின்றது.

D முதல் முதலில் மொழியைப் பேசியவர்கள் இது முன் அது பின் என்று சில முறை அமைத்துப் பேசிவிட்டனர். அவர்களைப் பார்த்துப்பேசக் கற்றுக்கொண்ட மற்றவர்கள் அந்த முறையை அப்படியே கற்றுக்கொண்டனர்.

D புதிதாக ஒரு வாய்பாட்டை அமைத்துக்கொள்வதைவிடப் பழைய வாய்பாட்டைப் பின்பற்றுவதால் இரு வகை நன்மை உண்டு.

D ஒன்று புதிதாகப் படைத்தலைவிடப் பழையதைப் பின்பற்றுதல் எளிது ஆதலின் முயற்சி குறைகின்றது. மற்றொன்று கேட்பவர்க்கு புதியதை விளங்கவைத்தல், அரிய முயற்சியாகும்.

எழுவாய் + பயனிலை

| | | |
|---|---|---|
| ஆண்பால் எழுவாய் | + | ஆண்பால் பயனிலை |
| பெண்பால் எழுவாய் | + | பெண்பால் பயனிலை |
| பலர்பால் எழுவாய் | + | பலர்பால் பயனிலை |
| ஒன்றன் பால் எழுவாய் | + | ஒன்றன்பால் பயனிலை |
| பலவின்பால் எழுவாய் | + | பலவின்பால் பயனிலை |
| தன்மை ஒருமை எழுவாய் | + | தன்மை ஒருமைப் பயனிலை |
| தன்மைப் பன்மை எழுவாய் | + | தன்மை பன்மை பயனிலை |
| முன்னிலை ஒருமை எழுவாய் | + | முன்னிலை ஒருமைப் பயனிலை |
| முன்னிலை பன்மை எழுவாய் | + | முன்னிலை ஒருமைப் பயனிலை |

எழுவாய் + செயப்படுபொருள் + பயனிலை

பெயரெச்சம் + பெயர் வினையெச்சம் + வினை

D என்பன அவ்வாறு தமிழரின் மனத்தில் பதிந்துவிட்ட வாய்பாடு இவற்றிற்கு மாறாக வரும் வாக்கியங்கள் வழு என்று தள்ளப்பட்ட அல்லது வழக்கில் இடம் பெற்றுவிட்டால் வழுவமைதியாகக் கொள்ளப்படும்.

D ஜரிஷ் மொழி பேசுவோரின் வாக்கிய அமைப்பில் வினைச்சொல் வாக்கியத்தின் முதலில் நிற்கின்றது. துருக்கி முதலிய மொழிகளிலும் தமிழ் முதலிய திராவிட மொழிகளிலும் வினை இறுதியில் நிற்கின்றது.

D சீனமொழியில் வாக்கியத்தில் எல்லாச் சொற்களும் தனித்தனியாக நின்று பொருள் உணர்த்தும். பெரும்பாலும் ஓரசைச் சொற்களாகவே நிற்கும். இலக்கண வேறுபாடு உணர்த்துகின்ற சீனமொழியில் குறைச்சொற்கள் (Empty words) எனப்படுகின்ற இடைச்சொற்களும் தனித்தனியாகவே நிற்கும்.

D சொற்கள் பல தொடர்ந்து அமையும் முறையே சொற்றொடரமைப்பு என்பதாகும்.

D கார்டினர் என்னும் ஆங்கில அறிஞர் இதற்குச் சொல்லும் காரணம் மிகச்சிறந்து விளங்குகின்றது. ஒரு வாக்கியத்தில் பேசுவோன், கேட்போன், பேசப்படும் பொருள் அதை விளக்கும் சொற்கள் என நாற்பகுதி உண்டு. கேட்போனுக்குப் பேசப்படும் பொருளை விளக்குவதே பேச்சின் நோக்கம் ஆதலின் அந்தப் பொருள் கேட்போனை விட்டு எவ்வளவு சேய்மையில் உள்ளதோ அவ்வளவு மிகுதியா சொற்களால் விளக்கம் தேவையாகின்றது.

D வெறுங் கண்மூடி இலக்கண முறையால் அதை வாக்கியம் அன்று என மறுத்தல் கூடாது என்பர் அறிஞர் கார்டினர்.

D இவ்வாறு அமையும் வாக்கியங்களை முழு வாக்கியங்கள் (Full Sentences) என்றும் மற்ற வாக்கியங்களைக் குறைவாக்கியம் (Minor Sentences) என்றும் புளும்பீல்ட் பாகுபாடு செய்கிறார்.

முழு வாக்கியம் செய்பவன் செயல் (actor - action) என்ற முறையில் அமைவது என்றும், மற்றது ஏவல் முறையில் அமைவது என்றும் கூறுகிறார். சில வாக்கியங்களில் செய்பவன் செயல் இரண்டும் ஒரே சொல்லில் அமைவத உண்டு என்றும் குறிக்கிறார். செய்தான் என்னும் தமிழ்ச்சொல்லின் பகுதியில் செயலும் விகுதியில் செய்பவனும் ஆக இரண்டும் இடங்கியிருத்தல் காண்க.

ரஷ்ய மொழியில் இவ்வாறான வாக்கியங்கள் உண்டு எனக்காட்டி அவற்றை (Errative predication) என்றும் Equational predication என்றும் குறிப்பிடுகிறார் புளும்பீல்ட்.

எல்லா மொழிகளிலும் பொதுவாக வாக்கியம் நான்கு வகைப்படும் என்பது அறிஞர் கருத்து.

செப்பு, வினா, விருப்பு, வியப்பு என்பன விருப்பு என்னும் வகையில் ஏவல், வியங்கோள், வேண்டுகோள், விழைவு என்பன அடங்கும்.

அவர் புலவர் – செப்பு
அவர் யார் – வினா
அவர் வாழ்க – விருப்பு
என்னே புலமை! – வியப்பு

D தமிழ் மொழியில் சொற்கள் தொடரும் முறையில் அடிப்படையாக உணரத்தக்கவை சில உள. அவையாவன.

D தமிழ் வாக்கியத்தில் எழுவாய் எங்கேனும் அமையும் அது பெயராகவே இருக்கும் (தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் பெயராகவே அடங்கும்.

வந்தார் புலவர்

D எகிப்து மொழியில் பெரும்பான்மையும் பயனிலைக்குப் பின்றலே இயல்பாக உள்ளது.

D பயனிலை பெரும்பாலும் இறுதியில் நிற்கும். விரைவு முதலான குறிப்பைப் புலப்படுத்த நேரும்போது முதலிலும் இடையிலும் நிற்றல் உண்டு. பயனிலை பெரும்பாலும் வினைமுற்றாக இருத்தல் இயல்பு சிறுபான்மை பெயராக இருக்கும்.

# TEACHER'S CARE ACADEMY

## KANCHIPURAM

# தமிழ்

## (அலகு - III)




## COMPETITIVE EXAM

### FOR

## PG-TRB 2019 – 20

# UNIT-III
## பொருளடக்கம்

**நன்னூல் - சொல்லதிகாரம்**

1. பெயரியல்
2. வினையியல்
3. பொதுவியல்
4. இடையியல்
5. உரியியல்

**சொல்லதிகாரம் - சொல்லதிகாரம்**

1. கிளவியாக்கம்
2. வேற்றுமையியல்
3. வேற்றுமை மயங்கியல்
4. விளிமரபு
5. பெயரியல்
6. வினையியல்
7. இடையியல்
8. உரியியல்
9. எச்சவியல்

யாப்பு

**யாப்பருங்கலக் காரிகை**

1. உறுப்பியல்
2. செய்யுளியல்
3. ஒழிபியல்

**தொல்காப்பியம் - பொருளதிகாரம்**

**தண்டியலங்காரம்**

**பொருளணியியல்**

**பெருங்காப்பியத்தின் இலக்கணம்**

**பொருளணிகள்: 35**

## நன்னூல் - சொல்லதிகாரம்

| எண் | சொல்லதிகாரம் | நூற்பா |
|---|---|---|
| 1. | பெயரியல் | 62 |
| 2. | வினையியல் | 32 |
| 3. | பொதுவியல் | 68 |
| 4. | இடையியல் | 22 |
| 5. | உரியியல் | 21 |
| | | 205 |

## 1. பெயரியல்

**கடவுள் வணக்கம்:**

முச்சங்க நிழற்று முழுமதி முக்குடை
அச்சுத னடிதொழு தறைகுவன் சொல்லே

**சொல்லின் பொது இலக்கணம்:**

"ஒருமொழி தொடர் மொழி பொதுமொழி என்றா
இருதிணை ஐம்பாற் பொருளையும் தன்னையும்
மூவகை இடத்தும் வழக்கொடு செய்யுளின்
வெளிப்படை குறிப்பின் விரியது சொல்லே"

**வழக்கின் தொகை: 2 (இயல்பு, தகுதி) வழக்கின் வகை: 6**

இலக்கணமுடையது, இலக்கணப்போலி, மரூஉ - இயல்பு வழக்கு
இடக்கரடக்கல், மங்கலம், குழூஉக்குறி – தகுதி வழக்கு

**இயல்பு வழக்கு**

1. இலக்கணமுடையது – நீலம், நீர், தீ, காற்று
2. இலக்கணப்போலி - இல்முன் - முன்றில், நகர்ப்புறம் - புறநகர்
   புறஉலா – உலாப்புறம், கண் மீ – மீகண் கோவில் - கோயில்
   பொதுவில் - பொதியில்.
3. மரூஉ: அருமருந்து அன்னபிள்ளை – அருமந்த பிள்ளை
   தொண்டைமான் நாடு - தொண்டைநாடு
   சோழநாடு - சோணாடு
   தஞ்சாவூர் - தஞ்சை
   எவன் - என்

**தகுதி வழக்கு:**

1. இடக்கரடக்கல் - மலங்கழீஇ வந்தான் - கால்கழுவி வந்தான்
2. மங்கலம் - செத்தாரைத் துஞ்சினார் என்றல்
3. குழூஉக்குறி – பொற்கொல்லர் – பொன்னைப் பறி என்றல், வேடர் – கள்ளைச் சொல்விளம்பி என்றல்

**செய்யுள்:**

"பல்வகைத் தாதுவின் உயிர்க்கு உடல்போல்பல
சொல்லாற் பொருட்கு இடளாக உணர்வினில்
வல்லோர் அணிபெறச் செய்வன செய்யுள்"

**வெளிப்படை(1), குறிப்பு(9)**

1. ஒன்றொழி பொதுச்சொல்: ஆயிரம் மக்கள் பொருதார்
2. விகாரம்: மரை மலர்
3. தகுதி: கால் கழீஇ வருதும், திருமுகம், பறி
4. ஆகுபெயர்: புளி தின்றான்
5. அன்மொழித்தொகை: பொற்றொடி வந்தாள்
6. குறிப்பு வினைச்சொல்: சொலல் வல்லன்
7. முதற்குறிப்பு: ஆத்திச்சூடி கற்றான்
8. தொகைக் குறிப்பு: தமிழ்வேந்தர்

# TEACHER'S CARE ACADEMY
## KANCHIPURAM

# தமிழ்

## (அலகு - IV)




# COMPETITIVE EXAM
## FOR
# PG-TRB 2019 – 20

## அலகு 4

**பாடத்திட்டம்**

**அகம் - புறம் - முதல், கரு, உரிப்பொருள்கள், தொல்காப்பியம் - புறப்பொருள் வெண்பாமாலை- நம்பியகப்பொருள்**

## அகப்பொருள் விளக்கம் - நாற்கவிராச நம்பி

### இலக்கண நூல்களில் அகப்பொருள்

- பொருள் இலக்கணம் தொடர்பாகத் தோன்றிய நூல்கள் பல. அவற்றுள்ளும் அகப்பொருள் பற்றிய நூல்களே மிகுதி. இறையனார் அகப்பொருள், தமிழ்நெறி விளக்கம், நம்பியகப்பொருள், களவியல் காரிகை, மாறன் அகப்பொருள் என்னும் ஐந்து நூல்கள் அகப்பொருள் இலக்கணத்தை மட்டுமே கூறுவன.
- தொல்காப்பியம், வீரசோழியம், இலக்கணவிளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம், அறுவகை இலக்கணம் ஆகிய நூல்களில் பிற இலக்கணங்களோடு அகப்பொருள் இலக்கணமும் ஒரு பகுதியாக இடம்பெறுகிறது.
- தஞ்சைவாணன்கோவை, திருப்பதிக்கோவை என்ற இரண்டு நூல்களும் முறையே நம்பியகப்பொருள், மாறன் அகப்பொருளுக்கான மேற்கோள் தொகுப்பாக வழங்கி வருகின்றன.

### அகப்பொருள் இலக்கண நூல்கள் அட்டவணை

| எண் | நூலின் பெயர் | ஆசிரியர் பெயர் | காலம் | பகுப்புகள் | நூற்பாக்கள் |
|---|---|---|---|---|---|
| 1. | தொல்காப்பியம் | தொல்காப்பியர் | கி.மு.3 | பொருளதிகாரம் 4 இயல்கள் | 214 |
| 2. | இறையனார் அகப்பொருள் | இறையனார் | கி.பி.7 | களவு, கற்பு | 60 |
| 3. | தமிழ்நெறி விளக்கம் | ஆசிரியர் பெயர் தெரியவில்லை | கி.பி.9 | பொருளியல் | 25 |
| 4. | வீரசோழியம் | புத்தமித்திரர் | கி.பி.11 | பொருட்படலம் | 21 |
| 5. | நம்பியகப்பொருள் | நாற்கவிராசநம்பி | கி.பி.13 | அகத்திணையியல், | 252 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | களவியல், வரைவியல், கற்பியல், ஒழிபியல் | |
| 6. | களவியற்காரிகை | ஆசிரியர் பெயர் தெரியவில்லை | கி.பி.13 | அகப்பொருள் தோழியிற்கூட்டம் கற்பொழுக்கம் | 23 |
| 7. | மாறன் அகப்பொருள் | திருக்குருகைப் பெருமாள்கவிராயர் | கி.பி.16 | களவு, கற்பு, வரைவு | 16 |
| 8. | இலக்கண விளக்கம் | வைத்தியநாத தேசிகர் | கி.பி.17 | அகத்திணையியல் | 226 |
| 9. | தொன்னூல் விளக்கம் | வீரமாமுனிவர் | கி.பி.18 | பொருளியல் | 58 |
| 10. | முத்துவீரியம் | முத்துவீரிய உபாத்தியாயர் | கி.பி.19 | அகஒழுக்கஇயல், களவு ஒழுக்க இயல், கற்பு ஒழுக்க இயல் | 92 |
| 11. | சுவாமிநாதம் | சுவாமி கவிராயர் | கி.பி.19 | அகத்திணை மரபு, கைகோள் மரபு | 58 |
| 12. | அறுவகை இலக்கணம் | வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் | கி.பி.19 | பொருளியல் அகப்பொருள் | 56 |

## அகப்பொருள் விளக்கம்
### (நம்பியகப்பொருள்)

❖ இயல்கள் - 5:

1. அகத்திணையியல் 116 நூற்பா
2. களவியல் 54 நூற்பா
3. வரைவியல் 29 நூற்பா
4. கற்பியல் 10 நூற்பா
5. ஒழிபியல் 43 நூற்பா

--------------------
252
----------------------

❖ நூலாசிரியர் நாற்கவிராச நம்பி, திருப்புளியங்குடி உய்யவந்த தேவனாரின் மகன், இவர் குலசேகர பாண்டியன் காலத்தவர் என்றும் சமயம் சமணம் என்றும் சிறப்புப் பாயிரம் கூறும். காலம் கி.பி.12ஆம் நூற்றாண்டு.

❖ இந்தப்பாயிரத்தின் வேறொரு பாயிரம் உண்டென்பது சுன்னாகம் திரு.அ.குமாரசுவாமிபிள்ளை அவர்கள் பதிப்பிலிருந்து பெறப்படுகிறது.

❖ உரையாசிரியர் விவரம் அறியப்படவில்லை எனினும், இவர் எல்லா அகப்பொருள் துறைகளுக்கும் தஞ்சைவாணன்கோவை (பொய்யாமொழிப்புலவர்) செய்யுட்கள் பலவற்றையும் சங்கப் பாட்டுக்கள் பலவற்றையும் மேற்கோளாகக் காட்டுகிறார்.

உரை: 1. கா.ர.கோவிந்தராச முதலியார்

2. வ.த.இராமசுப்பிரமணியம்

# TEACHER'S CARE ACADEMY
## KANCHIPURAM

# தமிழ்

## (அலகு - V)



## COMPETITIVE EXAM
### FOR
## PG-TRB 2019 – 20

# TEACHER'S CARE ACADEMY, KANCHIPURAM

## TNPSC-TRB- COMPUTER SCIENCE -TET COACHING CENTER

**HEAD OFFICE:** NO. 38/23, VAIGUNDA PERUMAL KOIL, SANNATHI STREET, KANCHIPURAM – 1. CELL: 9566535080

B.Off 2: 65C, Thillai Ngr(West), 4th Cross St, Trichy – 620018

B.Off 3: Vijiyaraghavachariar Memorial Hall(Opp to Sundar Lodge), Salem

Trichy : 76399 67359 Salem : 93602 68118


## அலகு 5

| பாடத்திட்டம் |
| --- |
| ❖ மெய்ப்பாடு |
| ❖ மெய்ப்பாட்டின் அடிப்படை |
| ❖ மெய்ப்பாட்டின் நிலைக்களன்கள் |
| ❖ அகத்திணை மெய்ப்பாடுகள் |
| ❖ புறனடை |
| ❖ பொருள்கோள் |
| ❖ தொல்காப்பியர் கூறும் பொருள்கோள் |
| ❖ யாப்பருங்கலக்காரிகை |
| ❖ உள்ளுறை |
| ❖ உள்ளுறையுவமை வகை |
| ❖ நம்பியகப்பொருள் |
| ❖ இறைச்சி |

## மெய்ப்பாட்டியல்

(தொல்காப்பியத்தின் ஆறாம் இயல்)

**மெய்ப்பாடு பற்றிய இவ்வியலில்**

1. 'மெய்ப்பாடு' என்னும் சொல் விளக்கம்
2. எண் வகை மெய்ப்பாடுகள்
3. அவை தோன்றுவதற்கான காரணங்கள்
4. எண்வகை மெய்ப்பாடுகள் அல்லாத பிற மெய்ப்பாடுகள்
5. களவொழுக்கத்தில் மெய்யுறு புணர்ச்சியில் தோன்றும் மெய்ப்பாடுகள்
6. களவொழுக்க காலப்பிரிவில் தோன்றும் மெய்ப்பாடுகள்
7. திருமணத்திற்குத் தூண்டும் மெய்ப்பாடுகள்
8. இல்லற வாழ்க்கை வாழும் காலத்தில் தலைவியிடம் தோன்றும் மெய்ப்பாடுகள்
9. மெய்ப்பாடுகளை வெளிப்படுத்தும் தலைவன் தலைவியிடம் அமைய வேண்டிய பத்து வகைப் பண்புகள்

10. தலைவன் தலைவியரிடம் அமையக் கூடாத பண்புகள், மெய்ப்பாடுகளை விளங்கிக் கொள்ளும் திறன்.

**மெய்ப்பாட்டு அடிப்படைகள்**

| **சுவை** | **வகை** |
|---|---|
| 1.நகை | 1.எள்ளல் 2.இளமை 3.பேதைமை (அறிவின்மை) 4.மடம் (ஒன்றை வேறொன்றாகத் திரியக் கோடல்) |
| 2.அழுகை (அவலம்) | 1.இழிவு (இழிவுபடுத்துதல்) 2.இழவு உயிராவது பொருளாவது இழத்தல் 3.அசைவு (தளர்ச்சி) 4.வறுமை |
| 3.இளிவரல் | 1.மூப்பு 2.பிணி 3.வருத்தம் 4.மென்மை (மெலியர் எளியராதல்) |
| 4.மருட்கை | 1.புதுமை 2.பெருமை 3.சிறுமை (மிக நுண்ணியன) 4.ஆக்கம் (ஒன்றன் பரிணாமம்) |
| 5.அச்சம் | 1.அணங்கு (தெய்வம்) 2.விலங்கு, கள்வர், தம் தலைவராயினர் (தந்தை, ஆசிரியர், உயர் அதிகாரி போல) |
| 6.பெருமிதம் | 1.கல்வி 2.தறுகண்மை (வீரம்) 3.புகழ் 4. கொடை |
| 7.வெகுளி | 1.உறுப்பறை (உறுப்புகளை வெட்டுதல்) 2.குடிகோள் (குடிமக்களை நலிதல்) 3.அலை(த்)தல் 4.கொலை |
| 8. உவகை | 1.செல்வம் 2.புலன் (அறிவுடைமை) 3.புணர்வு (மகளிரைக் கூடுதல்) 4.இன்பவிளையாட்டு |

**மெய்ப்பாடு**

"சுவை என்பது காணப்படுபொருளால் காண்போரகத்தில் வருவதோர் விகாரம்" என்றும் "மெய்யின்கண் தோன்றுதலின் மெய்ப்பாடாயிற்று" என்றும் இளம்பூரணர் விளக்குவர். இது நாடக நூல் அடிப்படையிலான விளக்கம்.

பேராசிரியர் "மெய்ப்பாடு என்பது பொருட்பாடு. அதாவது உலகத்தார் உள்ள நிகழ்ச்சி ஆண்டு நிகழ்ந்தவாறே புறத்தார்க்குப் புலப்படுவதோராற்றான் வெளிப்படுதல்" என்று விளக்குவது இலக்கியச் சார்பான விளக்கமாகும். செய்யுளியலின் முதல் நூற்பாவில் அவர் மெய்ப்பாடென்பது சொற்கேட்டார்க்குப்பொருள் கண்கூடாதல்" என்று விளக்குவது மிகப் பொருத்தமுடையது. செய்யுளியலிலும் தொல்காப்பியர் (பொருளதிகாரம்) மெய்ப்பாடு என்ற கோட்பாட்டை விளக்குவார்.

"உய்த்துணர்வு இன்றித் தலைவரு பொருளான்
மேய்ப்பட முடிப்பது மெய்ப்பாடாகும்" (1460) செய்யுளியல்
"எண்வகை இயல்நெறி பிழையாதாகி
முன்னுறக் கிளந்த முடிவினது அதுவே" (1461) செய்யுளியல்

# TEACHER'S CARE ACADEMY
## KANCHIPURAM

# தமிழ்

## (அலகு - VI)




# COMPETITIVE EXAM
## FOR
# PG-TRB 2019 – 20

HEAD OFFICE: NO. 38/23, VAIGUNDA PERUMAL KOIL, SANNATHI STREET, KANCHIPURAM – 1.CELL: 9566535080
B.Off 2: 65C, Thillai Ngr(West), 4th Cross St, Trichy – 620018
B.Off 3: Vijiyaraghavachariar Memorial Hall(Opp to Sundar Lodge), Salem
Trichy : 76399 67359 Salem : 93602 68118

# PG TRB – TAMIL - 2019-20

## UNIT - VI

முச்சங்கங்கள்.

| | முதற்சங்கம் | இடைச்சங்கம் | குடைச்சங்கம் |
|---|---|---|---|
| காலம் | 4400 | 3700 | 1800 |
| புாடிய புலவர்கள் | 4449 | 3700 | 449 |
| இடம் | தென்மதுரை | கபாடபுரம் | மதுரை |
| குறிப்பிடத்தக்கவாகள் | அகத்தியர், சிவபெருமாள், முருகவேள், முரஞ்சியூர் முடிநாகலாய, நிதியின்கிழார், | தொல்காப்பியர் மோசியார் வெள்ளுர்க்காப் பியினார், சிறுபாண்டரய்கன் திரையன் மாறன், கீரந்தை, துவரைக்கோள் | சிறுமேதாவியார், சேந்தம், பூதணர் பெருங்குன்னுர் கிழார், இளந்திருமாறன், கரிநல்லந்தவனார், மருதனிளநாகனார், நக்கீரனார். |
| இலக்கணம் | அகத்தியம் | அகத்தியம், தொல்காப்பியம், | தொல்காப்பியம் |
| இயற்றிய நூல்கள் | புரிபாடல், முதுநாரை, முதுகுருகு, களரியாவிரை | மாபுராணம், இசை நுணுக்கம், பூதபுராணம், கலி, குருகு, வியாழமாலை அகவல், வெண்டாளி | நெடுந்தொகை, நற்தொகை, ஐங்குறுநூறு, புறநானூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல் 70, கூத்தும் வரியும் சிற்றிசையும் பேரிசையும் |
| நடைபெற்ற காலம் மன்னர்கள் ஆட்சி எல்லையில் | காய்சினவழுதி முதல் கடுங்கோன் வரை | வெண்டேர்ச்செழியன் முதல் முடத்திருமாறன் வரை | முடத்திருமாறன் முதல் உக்கிரப்பெருவழுதி ஈறாக |
| கவியரங்கேற்றிய காவலர் தொகை | 89 பாண்டிய எழுவர் | 59 பாண்டின் ஐவர் | 49 பாண்டிய மூவர் |

**முச்சங்கங்கள் (இறையனார் களவியல் உரை)**

சங்கம் இருந்ததா:

❖ சங்க உண்மையை மறுத்தவர்கள் பேராசிரியர் கே.என். சிவராசபிள்ளை, பி.டி. சீனிவாசய்யங்கார், எஸ். வையாபுரிப்பிள்ளை க. நமச்சிவாய முதலியார் போல்வர்.
❖ ஒரு சங்கம் (கடைச் சங்கம்) இருந்தது உண்மை என்போர் டி. ஆர். சேஷகிரி சாஸ்திரி. வீ.ஆர். இராமசந்திர தீட்சிதர். கே. ஏ. நீலகண்ட சாஸ்திரி. எஸ். வையாபுரி பிள்ளை
❖ முச்சங்கம் இருந்தது உண்மையே என்பவர்கள் உ.வே.சா. கா.சு.பிள்ளை கா.அப்பாத்துரையார் பாவாணர்
❖ புணர்ப்பு, கூடல் அவையம், துறை, தொகை என்றெல்லாம் முன்பு அழைக்கப்பட்ட ஒன்றைத்தான் பின்பு சங்கம் என் அழைக்கலாயினர்.
❖ கி.பி 7-ஆம் நூற்றாண்டிற்கு பின் இவ்வழக்கு பெரிதும் காணப்படுகிறது.
❖ நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கம் ஏறி – அப்பர்.
❖ கி.பி 5-ஆம் நூற்றாண்டில் சமண முனிவர் வச்சிரநந்தி மதுரையில் அமைத்த திரமிள சங்கம் என்ற அமைப்பால் சங்கம் என்ற வடமொழிப் பெயர் பெருவழக்காயிற்று.

**பாண்டியரும், தமிழரும்:**

அறங்கூறு அவையத்திற்கு உரியதென உறையூரைப் புகழ்தல் போல தமிழ் அவையத்திற்கு உரியதென மதுரையைப் புகழ்தல் பெருவழக்காயிற்று.

“தமிழ் நிலை பெற்ற தாங்கரு மரபின்

மகிழ் நனை மறுகின் மதுரை”(சிறுபாண்.)

“தமிழ் கெழு கூடல் தண்கோல் வேந்தே” (புறம்)

“தென் தமிழ் மதுரை” (மணி.)

“தமிழ் வையைத் தண்ணம்புனல்” (பரி.)

“முத்தும் முத்தமிழும் தந்து முற்றலால்” (கம்பர் - கிட்கிந்தை)

“வீயாத் தமிழுடையான், பல்வேறு கடற்றானைப் பாண்டியன் (யாப். குலம் உரைமேற்கோள்)

“மா பாரதம் தமிழ்ப் படுத்தும்

மதுராபுரிச் சங்கம் வைத்தும்” --சின்னமனூர்ச் செப்பேடு

**அகச்சான்றுகள்:**

❖ “தொல்லாணை நல்லாசிரியர்
புணர் கூட்டுண்ட புகழ்சால் சிறப்பின்
நிலந்தரு திருவின் நெடியோன் - மதுரைக் காஞ்சி
❖ “நிலந்தரு திருவின் பாண்டியன் அவையத்து
ஆறங்கரை நாவின் நான்மறை முற்றிய
அதங்கோட்டாசாற்கு அரிலதபத் தெரிந்த” – பனம்பாரனார்.
❖ “ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவனாக” (புறம்.)
❖ “முதுமொழி நீராப் புலன் நா உழவர்
புதுமொழி கூட்டுண்ணும் புரிசை சூழ் புனலூர” (கலி.)
❖ “நிலனாவில் திரிதரூஉம் நீண்மாடக் கூடலார்
புலனாவிற் பிறந்த சொற் புதிதுண்ணும் பொழுதன்றோ?”

# TEACHER'S CARE ACADEMY

## KANCHIPURAM

# தமிழ்

## (அலகு - VIII)



# COMPETITIVE EXAM

## FOR

# PG-TRB 2019 – 20

# TEACHER’S CARE ACADEMY, KANCHIPURAM

**TNPSC-TRB- COMPUTER SCIENCE -TET COACHING CENTER**

**HEAD OFFICE:** NO. 38/23, VAIGUNDA PERUMAL KOIL, SANNATHI STREET, KANCHIPURAM – 1. CELL: 9566535080

B.Off 2: 65C, Thillai Ngr(West), 4th Cross St, Trichy – 620018

B.Off 3: Vijiyaraghavachariar Memorial Hall(Opp to Sundar Lodge), Salem

Trichy : 76399 67359 Salem : 93602 68118

## அலகு VIII

உள்ளடக்கம்

- பக்தி இலக்கியம்
- தேவாரம்
- திவ்வியப்பிரபந்தம
- திருமந்திரம்
- திருப்புகழ்
- பட்டினத்தார்
- தாயுமானவர்
- அருணகிரிநாதர்
- கம்பராமாயணம்
- மகாபாரதம்
- பெரியபுராணம்
- திருவிளையாடற்புராணம்
- தலபுராணங்கள்
- சிற்றிலக்கியங்கள் - 96 வகை பிரபந்தங்கள்
- சமணமும் தமிழும்
- பௌத்தமும் தமிழும்
- இஸ்லாமும் தமிழும்
- கிறிஸ்துவமும் தமிழும்
- சித்தர்கள்
- சமயச்சீர்திருத்தம்

## பக்தி இலக்கியம் (பல்லவர்காலம்)

- பல்லவர் காலம் (கி. பி. 600 – 875)
- இதனைப் 'பக்தி இயக்க காலம்' (அ) 'சைவ வைணவ காலம் ' என்பர்
- தொண்டை நாட்டையும் சேரநாட்டையும் களப்பிரரிடமிருந்து சிம்மவிஷ்ணு பல்லவன் (பிற்காலப் பல்லவ அரசன்) கைப்பற்றினான்
- பாண்டியன் கடுங்கோன் களப்பிரரிடமிருந்து தன் நாட்டை விடுவித்தான்
- வடக்கே பல்லவர்களும், தெற்கே பாண்டியர்களும் தமிழகத்தை ஆண்டனர்
- இக்காலத்தில் சமண பௌத்த சமயங்கள் வலுவிழந்து சைவ வைணவ சமயங்கள் மேலோங்கின
- மன்னவன் வழியே மக்களும் ஒழுகினர். வடக்கே திருநாவுக்கரசர் பல்லவன் மகேந்திரவர்மனையும் தெற்கே திருஞானசம்பந்தர் பாண்டியன் நின்றசீர் நெடுமாறனையும் சமண சமன சமயத்திலிருந்து சைவ சமயத்திற்கு மாற்றினர்
- தேவார திவ்யப்பிரபந்தங்கள் பிறந்த காலம்
- பல்லவர் காலத்தில் புதிய உரைநடையான மணிபிரவாள நடை தோன்றியது
- இக்காலத்தில் 'விருத்தப்பாவே' சிறந்திருந்தது
- பிற இலக்கியங்களில் இல்லாத அளவில் மூவர் தேவரமும். முதலாழ்வார் நீங்கிய ஒன்பதின்மரின் பிரபந்தங்களும் தோன்றின
- கீழ்கணக்கில் நாலடியார் தொகுக்கப்பெற்ற காலம் ஆகும்
- பல்லவர் கால இலக்கியங்கள்
    1. பெருங்கதை
    2. ஞானவுலா
    3. நந்திக்கலம்பகம்
    4. பாரதவெண்பா
- பல்லவகால இலக்கண நிகண்டுகள்
    1. களவியலுரை
    2. புறப்பொருள் வெண்பாமாலை
    3. சங்கயாப்பு பாட்டியல்
    4. திவாகரம்
    5. பிங்களம்
- பிரபந்தங்கள் தோன்றத் தொடங்கிய காலம் பல்லவர் காலமே
- கி.பி-7ல் சைவம் சிறக்க. வைணவம் தாழ்ந்திருந்தது கி.பி 8 இல் வைணவம் வளமுற சைவம் சிறிதடங்கியது
- முதன் முதலில் தமிழ்நாட்டில் விநாயகர் வழிபாட்டைக் கொண்டு வந்தோர் பல்லவர்களே.

# TEACHER'S CARE ACADEMY

## KANCHIPURAM

# தமிழ்

## (அலகு - IX)



## COMPETITIVE EXAM

### FOR

## PG-TRB 2019 – 20

# TEACHER'S CARE ACADEMY, KANCHIPURAM

TNPSC-TRB- COMPUTER SCIENCE -TET COACHING CENTER

HEAD OFFICE: NO. 38/23, VAIGUNDA PERUMAL KOIL, SANNATHI STREET, KANCHIPURAM – 1. CELL: 9566535080

B.Off 2: 65C, Thillai Ngr(West), 4th Cross St, Trichy – 620018

B.Off 3: Vijiyaraghavachariar Memorial Hall(Opp to Sundar Lodge), Salem

Trichy : 76399 67359 Salem : 93602 68118


## PG TRB TAMIL 2019-20

### தமிழ் பகுதி-9

சிறுகதை மிகப் பழமை என்று இலக்கிய வகையாகும் இதன் வளர்ச்சிக்கு உரிய மூல வேற்று மாந்தரின் கதை கேட்கும் ஆர்வத்திலேயே உள்ளது மனித வரலாறு தொடங்கிய கால முதலே கதை கேட்கும் இயல்பு இருந்திருக்கின்றது எனத் தெரிகின்றது மனிதன் ஏன் கதையை விரும்பிக் கேட்கின்றான் என்பதும் ஒரு நல்ல வினா இதற்குச் "சாமர் செட் மாம்" என்பவர் விடை கூறுகின்றார். உடைமை பற்றிய உணர்வு மனிதனிடத்தில் மிக ஆழமாக வேரூன்றியிருக்கிறது வரலாறு ஆர்வமும் மிக ஆழமாக வேரூன்றியிருக்கிறது வரலாறு தொடங்கிய காலம் முதலே ஒருவர் கதை சொல்வதைக் கேட்பதற்காகவே பலரும் நெருப்பைச் சுற்றிக் கூட்டமாக பழக்கமோ, இருந்திருக்கின்றது.

வரலாற்றின் பழமையோடு தொடர்புடைய இச் சிறுகதை ஒரு நல்ல கலையாக மிகுதியாக வளர்ந்தது பத்தொன்பது இருபதாம் நூற்றாண்டுகளில் ஆகும். இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் 1800ம் ஆண்டுக்குப் பிறகு படித்தவர் கூட்டம் பெருகவே அவர்களின் தேவைக்கேற்பப் பருவந்தோறும் பெருகிற்று என்பர் அறிஞர் நம் தமிழகத்திலும் இந் நூற்றாண்டின் தொடக்க முதல் இலட்சக் கணக்கான மக்கள் சிறுகதையை விரும்பிப் படிக்கும் வழக்கம் ஏற்பட்டுள்ளது எனலாம்.

**இக்கால இலக்கியங்களில் சிறுகதை பெறுமிடம்**

இன்றைய இலக்கிய உலகில் சிறுகதைக்கென்று ஒரு சிறப்பிடம் உள்ளது நாகரிகம் முற்றிப் போக்குவரத்துக் கருவிகள் பெருகி மக்கள் மிக விரைந்து செயற்படும் இந்நாளில் பலருக்கும் படிப்பதற்கு வசதியாக உள்ள துறை சிறுகதையே ஆகும் இச் சிறுகதை எண்ணிக்கையிலும் வகையிலும் பலபடியாக விரிந்து வளர்ந்து செல்வதற்கு நாடோறும் வாரந்தோறும் வெளிவரும் இதழ்கள் பெரிதும் காரணமாக அமைகின்றன. ஒரு குறிப்பிட்ட இதழில் வெளியிடப் பெறும் சிறுகதையை அந்த இதழை எடுத்த மாத்திரத்திலேயே ஒரே வேகத்தில் படித்து முடித்துவிடலாம்.

**மற்றொன்று:**

கருத்தாழம் நடைச்செறிவு முதலியன நிறைந்த விழுமிய பேரிலக்கியங்களை ஆழ ஊன்றி அமைதியாகப் படிப்பதற்குரிய பொறுமை பெரும்பாலோர்க்கு இன்று இல்லாமையும் சிறு கதையின் செல்வாக்குக்குக் காரணமாகின்றது இளங்கோவடிகள் இயற்றிய சிலப்பதிகாரம் போன்ற பண்பட்ட உயரிய இலக்கியங்களைக் கற்பதற்குரிய நேரமும் ஓய்வும் வசதியும் கல்வியும் இல்லாத இலட்சக்கணக்கான மக்கள் சிறுகதையைச் சிறிது நேரத்தில் படித்து முடித்துச் சிறியதொரு கலைப்பயனை விரைந்து பெற முடிகின்றது எனவே உயர்ந்த இறவாத பேரிலக்கியங்களையும் புரிந்து கொள்ளக் கடினமாக இருக்கும் இலக்கியப் பகுதிகளையும் கற்று மகிழ முடியாத இலட்சக்கணக்கான மக்கள் இன்று சிறுகதைகளைக் கற்று இன்புறும் நிலை ஏற்பட்டுள்ளது கருங்கல் கூறின் புதினம் போலவே சிறுகதையும் மக்கள் இலக்கியமாக மலர்ந்துள்ளது.

## சிறு கதையின் விளக்கம்

**சிறுகதை என்றால் என்ன?**

“சிறிய அளவில் அமைந்த கதையே சிறுகதையாகும்”. இப்படி ஒரு வரையறையைச் சிறு கதைக்குச் சொல்ல முடிந்தாலும் அளவு என்பதிலே ஆசிரியர்களிடையே வேறுபாடு இருக்கின்றது ஒரு பக்கம் அல்லது இருபக்க அளவில் அமைந்த சிறுகதையும் உண்டு மிகப் பெரிய சிறுகதையும் உண்டு வெவ்வேறு ஆசிரியர் எழுதும் சிறுகதையின் அளவு வேறுபடினும் சிறுகதைக்கென்றே அமைந்த சில தன்மைகளும் கட்டுக் கோப்புகளும் தோன்றிவிட்டன.

ஹெச். ஜி. வெல்ஸ் என்பார் சிறுகதையைக் குறித்துப் பின்வருமாறு கூறியுள்ளார்.

ஒரு சிறுகதை என்பது எளிமை சான்ற ஒரு படைப்பாக இருக்கின்றது அல்லது இருத்தல் வேண்டும் ஏதாவது ஒரு சிறிய தெளிவான பயனை மட்டும் விளைவிக்க அது முயலுகின்றது எடுத்த எடுப்பிலேயே பயில்வோரின் கவனத்தை ஈர்த்துப் பிடித்தல் வேண்டும் நெகிழ்ச்சியின்றி இயங்கி உச்சநிலை முடியும்வரை வாசகரின் முழுக் கவனத்தையும் ஒருமைப்படுத்தி மேன் மேலும் ஆழமாக ஊன்றச் செய்ய வேண்டும் கதையும் மிக உன்னிப்பாகக் கவனிக்கும் மனிதனின் திறமை நீண்டநேரம் நீடிக்க முடியாது சிறுகதைப் பயிற்சியிலும் இவ்வுண்மை பொருந்துவதாகும் ஆகவே இடையீடோ சோர்வோ நேருவதற்கு முன்பாகவே சிறுகதை நன்கு வெடித்து முற்றுப் பெறுதல் வேண்டும்.

ஹெச். இ. பேட்ஸ் என்பவர் எழுதும் ஆசிரியர் எண்ணித் துணியும் வண்ணம் சிறுகதை எவ்வாறு வேண்டுமானாலும் அமையலாம் என்கின்றார்.

எனவே மேற்கூறிய கருத்துகள் வாயிலாகச் சிறுகதை என்பது அளவில் சிறியதாக அமையவேண்டும் என்பதும் தொடக்க முதல் முடிவுவரை நம் கவனத்தைச் சிக்கெனப் பிடித்து ஒருமுகப்படுத்திக் கலைப் பயனை விளைவிக்க வேண்டும் என்பதும் சிறுகதை சிறிய கதையாகவே அமைவது நல்லது என்பதும் நமக்கு நன்கு விளங்கும்.

**சிறுகதை எழுதுதல்:**

சிறுகதை இலக்கியம் சிறந்த இலக்கியம் இவ்விலக்கியம் ஆங்கிலக் கல்வியால் தமிழ் மொழிக்குக் கிடைத்தது நன்மையாகும் 1921க்கு முன்னே தமிழ்நாட்டில் இன்றைக்கு சிறுகதை ([illegible]) இலக்கியம் தோன்றவில்லை பழைய முறையில் அமைந்த கதைகளும் நெடுங்கதைகளாகி நவீனங்களும் தோன்றின நல்ல இனிய நெடுங்கதை இலக்கியமும் (மேடை) ஒன்றிரண்டேதவிரப் பல தோன்ற வில்லை, பின்பு வங்காள மொழியிலிருந்தும் மராத்தி மொழியிலிருந்தும் நல்ல மொழிபெயர்க்கப்பட்ட சில தலைசிறந்த நெடுங்கதை இலக்கியங்களே தமிழகத்தில் உலவிவந்தன.

இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் இச்சிறுகதை இலக்கியம் 19-ஆம் நூற்றாண்டில் தோன்றி இன்று உச்ச நிலையை அமைந்துவிட்டது. நெடுங்கதையாகிய நவீனத்தைச் சில நாள்கள் படிக்க வேண்டியிருந்ததால், அந்த நாடுகளில் மக்கள் சிறிது நேரத்தில், ஒரு ரயில் நிலையத்தில் ஏறி முந்நூறு கல் தொலைவில் உள்ள மற்றொரு ரயில் நிலையத்தில் இறங்குவதற்குள் கிடைக்கக்கூடிய ஓய்வு நேரத்தில் படித்து இன்புறுதற்குரிய பொழுது போக்குக்கு ஏற்ற சிறுகதைகளைப் படிக்க விரும்பினார்கள், அதனால், அந்த நாடுகளில் சிறுகதை இலக்கியம் தோன்றியது.

TEACHER'S CARE ACADEMY

# TEACHER'S CARE ACADEMY

## KANCHIPURAM

# தமிழ்

## (அலகு - X)




# COMPETITIVE EXAM

## FOR

# PG-TRB 2019 – 20

## அலகு–X

## I.நாடக இலக்கியம்

## II.திறனாய்வு

நாடக இலக்கிய தோற்றம்

அமைப்பு, மூவகை, இணைவு முரண்

குறிப்பு முரண், மூன்று குரல்கள்

பழைய நாடகங்கள், பழங்கதைகள்

முத்தமிழ், இசை நாடக இலக்கியம்

இசைத்தமிழ்

நாடக இலக்கிய வளர்ச்சி

மனோன்மணீயம்

சங்கரதாஸ் சுவாமிகள்

ஔவை சண்முகம்

பம்மல் சம்மந்த முதலியார்

மனோகர், சோ

நாடகங்களின் வகைகள்

கீர்த்தனை நாடகம்

நொண்டி நாடகம், பள்ளு குறவஞ்சி நாடகம்

மேடை நாடகப் புதுமை மரபுகள்

சமூக நாடகங்கள், மொழிபெயர்ப்பு நாடகங்கள், புராண நாடகங்கள், நாடோடிக்கதை நாடகங்கள், பக்தி நாடகங்கள்

நாடகத்தமிழின் இன்றைய நிலை

### முக்கிய நாடகக்குழுக்கள்

| வ.எண் | நாடகக்குழுவின் பெயர் | நிறுவியவர் |
|---|---|---|
| 1 | இராகினி கிரியேஷன்ஸ் | கே.பாலச்சந்தர் |
| 2 | என்.எஸ்.நாடகசபா | என்.எஸ்.கிருஷ்ணன் |
| 3 | எம்.ஜி.ஆர்.நாடக சபா | எம்.ஜி.ராமச்சந்திரன் |
| 4 | சங்கரதாஸ்சுவாமி நாடகசபா | இராஜநாயகம் டி.எம். |
| 5 | சேவா ஸ்டேஜ் | எஸ்.வி.சகஸ்ரநாமம் |
| 6 | நேஷனல் தியேட்டர்ஸ் | மனோகர் |
| 7 | பால மனோகர சபா | தே.போ.கிருஷ்ணசாமிபாவலர் |

| | | |
|---|---|---|
| 8 | மதுரை ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனி | சச்சிதானந்தம் பிள்ளை |
| 9 | மதுரை தேவி பால வினோத சங்கீத சபா | ராஜமாணிக்கம் பிள்ளை டி.எஸ்.நவாப் |
| 10 | மதுரை ஸ்ரீ பால சண்முகானந்த சபா | டி.கே.எஸ்.சகோதரர்கள் |
| 11 | மனமோகன் நாடகக் கம்பெனி | கோவிந்தசாமி ராவ், நவாப் |
| 12 | விவேகா ஃபைன் ஆர்ட்ஸ் | இராமசாமி.சோ |
| 13 | ஸ்ரீசக்தி நாடக சபா | கிருஷ்ணசாமி.டி.கே |
| 14 | மனமோகனா நாடகக் கம்பெனி | (தஞ்சை)கோவிந்தசாமிராவ் |
| 15 | சமரச சன்மார்க்க சபை | சங்கரதாஸ்சுவாமிகள் |
| 16 | பாய்ஸ் கம்பெனி | சங்கரதாஸ்சுவாமிகள் |
| 17 | சுகுண விலாச சபா | பம்மல் சம்மந்த முதலியார் |
| 18 | தேவி நாடக சபா | கே.என்.ரத்தினம் |
| 19 | ஸ்டேஜ் இமேஜ் | லியோ பிரபு |
| 20 | ஸ்ரீ கிருஷ்ண விநோத சபா | சி.கண்ணையா |
| 21 | கலா நிலையம் | பூர்ணம் விஸ்வநாதன் |
| 22 | சாந்தி நிகேதன் | டி.எஸ்.சேஷாத்திரி |
| 23 | யுனைடெட் அமெச்சூர் ஆர்ட்ஸ் | ஒய்.ஜி.பார்த்தசாரதி |
| 24 | விஷ்ணுபிரியா | கோவை ராசேந்திரன் |
| 25 | நாடகப்பிரியா | எஸ்.வி.சேகர் |
| 26 | ஐ.என்.ஏ. தியேட்டர்ஸ் | வி.எஸ்.ராகவன் |
| 27 | என்.எஸ்.தியேட்டர்ஸ் | என்.எஸ்.நடராசன் |
| 28 | சரச விநோதினி சபை | பெல்லாரி கிருஷ்ணமாச்சாரி |
| 29 | கோபி தியேட்டர்ஸ் | கோமல் சுவாமிநாதன் |

## நாடக இலக்கியம்

- தமிழ் நாடகம் தொன்மைக்காலத்தில் நிலவி வந்த சமயக் கூத்துக்களினின்றும் உருவாகியது.
- சமயக்கூத்துக்கள் காலப்போக்கில் சமயச் சார்பினையிழந்து பொழுதுபோக்குக் கூத்துக்களாக மாறின.
- பொழுதுபோக்குக் கூத்துக்களில் ஆடல்களுடன் இணைந்த பாடல்களில் உரையாடல்களும் இணைந்தன.
- உரைப்பாடல்களும் ஆடல்களுமாக அமைந்து, கதையை விளக்கியபோது கூத்து நாடகமென்னும் முழு வடிவும் பெற்றது.
- பண்டைய நாடகங்கள் கூத்துக்கள் என அழைக்கப்பட்டன.
- சங்க காலத்தில் தமிழகத்தில் நடனக்கலை வல்லுநர்கள் கூத்தர் விறலியர் என்றும் நடிகர்கள் - பொருநர் என்றும் அழைக்கப்பட்டனர்.
- தமிழகத்தில் நாடகக்கலை தொல்காப்பியத்திற்கு முற்பட்டே உள்ளதென்பதை

  "நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
  பாடல் சான்ற புலனெறி வழக்கினும் "

  இப்பாடல் மூலம் அறியலாம்

# TEACHER'S CARE ACADEMY
## KANCHIPURAM

# தமிழ்

## (அலகு - XI)



## COMPETITIVE EXAM
### FOR
## PG-TRB 2019 – 20

## UNIT- XI

### உள்ளடக்கம்

- படைப்பாற்றல்
- மரபுக்கவிதையாளர்கள்
- புதுக்கவிதை
- எழுத்துக் காலம்
- ஹைகூ கவிதைகள்
- கதை
- புதினம்
- கட்டுரை
- நாடகம்
- சாகித்ய அகாதமி விருது
- ஞானபீட பரிசு, உலகத்தமிழ் மாநாடுகள்
- பிறமொழியிலிருந்து தமிழுக்கு, தமிழிலிருந்து பிறமொழிகளுக்கு

### பார்வை நூல்கள்

1. புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும் - வல்லிக்கண்ணன்
2. கவிஞராக - அ.கி. பரந்தாமனார்
3. கவிதையனுபவம் - நா. சுப்புரெட்டியார்
4. கவிதைக் கலை - நா. பார்த்தசாரதி
5. தமிழ்மரபு - பொன். முத்துக்குமரன்
6. நல்ல தமிழ் எழுத வேண்டுமா? - அ.கி.பரந்தாமனார்

### படைப்பாற்றல்

**படைப்பிலக்கியம்**

கவிஞன் அல்லது எழுத்தாளர்களால் புதியதாகப் படைக்கப்பெறுவது படைப்பியலக்கியம்.

மனிதனின் சிந்தனை, அழகுணர்வு, போலச் செய்தல், அதாவது சமூக வாழ்க்கை தொடங்கிய போதே படைப்பிலக்கியம் தோன்றிவிட்டது.

**ஹட்சன் கருத்து**

தன் எண்ணத்தை வெளியிடும் ஆர்வம், பிறரிடத்திலும் பிறவற்றிலும் காட்டுகிற ஆர்வம், எதற்கும் வடிவம் காணும் ஆர்வம், கற்பனை ஆற்றலின் வளர்ச்சி ஆகியவையே படைப்பிலக்கியத்தைத் தோற்றுவித்தன.

பெரிய அளவினவாக எழுதப்படுகின்ற படைப்புகள் நாவல், நாடகம், வாழ்க்கை வரலாறு போன்றவவையாகும். சிறிய அளவினதாக எழுதப்படுகின்ற படைப்புகள் கவிதை, சிறுகதை, ஓரங்க நாடகம், கட்டுரை போன்றவையாகும்.

**படைப்புணர்வு**

தகவல்களை ஒன்று திரட்டிப் பல பள்ளி விவரங்களுடன் அப்படியே அறிக்கையாக அளிப்பது கட்டுரையாகிறது. தகவல்களைக் கொண்டு தங்கள் அனுபவத்தின் வாயிலாக ஓர் உண்மையை உருவாக்கி, கற்பனை கலந்து கவிதை.

நாவல், சிறுகதை, நாடகம், ஓரங்க நாடகம் எனப் படைப்பதால் இப்படைப்பாளர்கள் கட்டுரையாளர்களைவிட மிகுதியான படைப்புணர்வைப் பெறுகிறார்கள்.

செய்தித்தாள்கள், இதழ்கள், தொலைக்காட்சி, வானொலி முதலான தகவல் தொடர்புச் சாதனங்களின் மூலம் எழுத்தாளர்கள் தங்கள் படைப்புகளுக்குரிய மூலப்பொருளைப் பெறுகிறார்கள். எழுத்தாளரின் அணுகு முறையில்தான் அது கதை, கவிதை அல்லது காப்பியம் என்ற வேறுபாட்டைப் பெறுகிறது.

**படைப்பாளியின் தன்மைகள்**

1. கட்டுரைப் படைப்பாளி நிறையப் படித்திருக்க வேண்டும்.
2. இன்னும் நிறையப் படிக்கவும் வேண்டும்.
3. ஆய்வு முறை தெரிந்திருக்க வேண்டும்.
4. தகவல் திரட்டத் தெரிந்திருக்க வேண்டும்.
5. சிறப்புப் பயிற்சியும் வேண்டும்.
6. கட்டுரையாளன் உண்மையை மட்டுமே எழுத வேண்டும்.
7. கதை, கவிதைப் படைப்பாளர்களுக்குக் கற்பனை ஆற்றல் மட்டும் போதுமானதாகும்.
8. ஒரு நிகழ்ச்சி ஓரங்க நாடகமாக்கப்பட்டால் சற்று வேறுபாடு காணப்பெறும்.

**படைப்புக்கான காரணம்**

எழுத்தாளன் தன்னுடைய அனுபவத்தைத் தனக்குத் தெளிவாக்கிக் கொள்ளவும் பிறருக்குச் சொல்லவும் மொழியின் மூலம் அதைப் பாதுகாக்கவும் படைக்கின்றான். ஒரு வீரச் செயலோ, ஒரு பிரச்சனையோ ஓர் ஆளது பண்போ, காதலோ, வெறுப்போ, அவமரியாதையோ, அச்சமூட்டும் நிகழ்ச்சியோ ஏதோ ஓர் அனுபவம் படைப்பின் மூலப் பொருள் ஆகும். அது கவிதையாக கதையாகப் பிறப்பெடுக்கும்.

**ஸ்டீவன்சன்**

ஸ்டீவன்சன் தன் மகனை மகிழ்விக்க ஒரு தீவின் வரைபடத்தை வரைந்து காட்டினார். பின்னாளில் ‘புதையல் தீவு’ (treasure lslande) என்கிற நாவல் உருவாவதற்கு அவ்வரைபடமே காரணமாயிற்று.

**பால்ஸாக்**

பால்ஸாக் பிரெஞ்சு மக்களின் வாழ்ககையைப் பற்றித் தெரியவிரும்பியதால் பிரெஞ்சு அரசியல் வாழ்வு, பிரெஞ்சுப்படை வீரர் வாழ்வு, பாரிஸ் நகர வாழ்வு என்று ஒரு படைப்பிலிருந்து இன்னொரு படைப்புக்கான பொறியைப் பெற்று எழுதினார்.

**கால்ஸ்வொர்த்தி**

கால்ஸ்வொர்த்தி ஒரு குடும்பத்தின் வரலாற்றைப் பரம்பரையாகச் சொல்வது போலப் பல காலப்பகுதிப் பிரெஞ்சு வாழ்க்கையை வெளியிட்டார்.

**கல்கி**

ஒரு படைப்பாளியின் படைப்பு இன்னொரு படைப்பாளியைத் தூண்டலாகும். கல்கியின் ‘பொன்னியின் செல்வன்’ நாவலில் வரும் நந்தினி பாத்திரைக் கொண்டு தொடர்ச்சியாக விக்கிரமன் ‘நந்திபுரத்து நாயகி’ என்ற நாவலைப் படைத்தார்.

**படைப்பிலக்கியத்தின் பயன்கள்**

1. உலக நிகழ்ச்சிகளை எடை போடுகிறார்கள்.
2. நிகழ்ச்சிகளுக்கு விளக்கமளிக்கிறார்கள்.